**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.27/2015**

**DW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | டேவிட் |
| **Father's Name** | : | அமலநாதன் |
| **Village** | : | வேட்டவலம் |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | உபதேசகர் |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025.
A1, 3 present. A2 absent. Petition u/s 317 crpc filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேட்டவலத்தில் மரியாவின் தூய நெஞ்ச ஆலயத்தில் உபதேசகராக உள்ளேன். எங்கள் ஆலயத்தில் கடந்த 16.02.2011 அன்று மார்டின் சார்லஸ் த/பெ அமலதாஸ் என்பவருக்கும் மேரி த/பெ தாமஸ் என்பவருக்கும் திருமணம் நடந்தது. நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன். எங்கள் ஆலயத்தில் பராமரிக்கப்படும் திருமண பதிவேடு கொண்டுவந்துள்ளேன். மேற்படி பதிவேட்டின் புகைப்படநகலை தற்போது உள்ள பாதிரியார் ஆரோக்கியசாமி என்பவர் கையொப்பம் செய்து சான்று வழங்கியுள்ளார். அதை நான் தாக்கல் செய்கிறேன். அது **எ.த.சா.ஆ.1**. ( அசல் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). அந்த பதிவேட்டில் மார்டின் சார்லஸ் என்று தமிழில் கையொப்பம் செய்துள்ளார். தற்போது திருமண பதிவேட்டை நான் கடந்த 9 ஆண்டுகளாக பராமரித்து வருகிறேன்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக மார்டின் சார்லஸ் என்பவரை மார்டின் என்றோ அல்லது சார்ல்ஸ் என்றோ அழைப்பார்கள் என்றால் சரிதான். அவர் தமிழிலும் கையொப்பம் செய்வார் அல்லது ஆங்கிலத்திலும் கையொப்பம் செய்வார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சார்லஸ் திருமண பதிவேட்டில் கையொப்பம் செய்தது பற்றி

எனக்கு நேரடியாக தெரியாது. காலப்போக்கில் ஒருவரது கையொப்பம் மாறுவதற்கு வாய்புள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C . Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.